உ

கடவுள் துணை

# விநோத
# ஜாலக்கண்ணாடி.

## இரண்டாம்பாகம்



இவை - சிறுமணவூர்
முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு

இவை ௰ பாகம்வரையில்
அச்சிட்டிருக்கிறது
ஒரேகட்டடமாகவும்
பயிண்டு செய்யப்படும்

ஆதிபுரி
இரத்தினவேலுமுதலியாரது
வாணீவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது,

1896.

கடவுள் துணை

# விநோதஜாலக்கண்ணாடி

## காப்பு-விருத்தம்

சரணமத்தி முகத்தான் திருவடி
சரணம் சண்முகன் தாளிரு பொன்னடி
சரணம் சத்தி சதங்கை மலரடி
சரணம் சற்குரு தாளிலென் சென்னியே

### 16-வது, மடியில்கட்டிய தேங்காயுடையுஞ்சாலம்.

வணங்கவேயின்னமொருவித்தைகேளு
வளமானதேங்காயைமடியில்கட்டி
யிணங்கவேயிருகையும்பின்னாலேத்தி
யெத்தனைதான்முடியேனும் போடச்சொல்லு
வணங்கியேசபையோர்க்கு மடியைக்காட்டி
கைகாட்டிமெய்காட்டி கதவைச்சாற்றி
பிணங்கியேபின்புரமாய்கையைவாங்கி
பகவதிவாடியென்று உடைத்துக்கட்டி
பிணங்களே பாரென்று வெளியில்வாநீ
பேசுவார் மந்திரங்கள் செய்தானென்றே

(வ-ம்,) தேங்காயைசவுக்கத்தில்சுத்தி மடியில்கட்டிவிட்டுஇரண்டுகைகளையும் பின்புரமாய்மடித்து இரண்டுபெருவிரலையும் ஒன்றின்மேல்ஒன்றுவைத்து கட்டிவிடச்சொல்லி ஒருவீட்டுக்குள் சென்று கதவைச்சாற்றி தான்போடச் சொல்லினபிறகு நீஉட்காந்து பின்னாலிருக்குங் கைகளை புட்டத்தின் கீழாகக்கொடுத்து மெதுவாய்காலைமடித்து உள்ளேவிட்டு கையைவாங்கினால் கட்டுப்பிரகாரமே கை பின்புறம் வந்துவிடும் தேங்காயையுடைத்துகட்டிக்கொண்டு முன்போல் காலில்கீழாகக் கையைக்கொடுத்து பின்னுக்கு வாங்கிக்கொண்டு கதவைத்தட்டி வெளியில் வந்தால் தேங்காயைப்பார்த்து ஆச்சரியப்பட்டுமந்திரஞ்செய்தானென்றே நம்புவார்கள் ஆனால் உள்ளே யிருக்கும்போது மலையாள தேவி வாடி மசானக்காளிவாடி சத்தியே முன்னேவா

டிசாமுண்டி ஓடிவாவென்று சொல்லிக்கொண்டேமேற்படி தே ங்காயை யுடைத்துவரவேணும்.

## 17-வது, தேங்காய் நடக்குஞ்ஜாலம்.

மந்திரமேயில்லையென்று சொல்லாதேநீ
  மதிமுக்கால்வேணுமடா மாணுகேளு
தந்திரம்பார்தேங்காயை துவாரஞ்செய்து
  தலைகுடிமித்தீண்டாதே தவளம்போக்கு
தந்திரமாய் சுண்டெலியை உள்ளேவிட்டு
  தடைபோட்டு மஞ்சள்பூசி குங்கமிட்டு
வந்திருக்கும் சபைநடுவே விட்டுப்பாரு
  வாசலெல்லாம் புரளுமடா வசியமென்பார்.

(வ-ம்)ஒருதேங்காயை குடிமிமுதலானதுகளைப் போக்காமல் புன்னக்காய் நுழையும்படியான துவாரஞ்செய்து உள்ளிருப்பதை யெல்லாம்சுரண்டிவிட்டு சுண்டெலியைஉயிருடன் உள்ளேவிட் டு மேல்பிலலைபைமூடி மஞ்சள்குங்குமம பலமாய்ப்பூசி முன்ன மே வைத்துக்கொண்டு சபையோரைப்பார்த்து யாராகிலும் ஒரு தேங்காய் கொண்டுவந்துகொடுத்தால் அதை நடக்கச் சொலலு வேனென்று வாங்கிக்கொண்டு மஞ்சள் குங்கமம்பூசி தூபதீபங் கொடுத்து தந்திரமாக அதை மறைத்துவிட்டு முன்தேங்காயை விட்டால் அது ஒருயிடத்தில் நிற்காதுஉருண்டுகொணடேயிருக் கும் பார்த்தவர்கள் மிரளுவார்கள்.

## 18-வது எலுமிச்சம்பழங் குதிக்குஞ்ஜாலம்.

என்னவேயின்னமொரு ஜாலக்கேளு
  எலுமிச்சம்பழத்தினிடை துளையுண்டாக்கி
பன்னவேருகமது களஞ்சிதூக்கி
  பக்குவமாயுள்ளிறக்கி மெழுக்கடைத்து
துன்னவேவெய்யலிலே வைத்துப்பாரு
  சூரியனார்காந்தியது தாக்குமாகில்
என்செய்வேன் பழத்தினது கொண்டாட்டந்தா
  னியம்பலாந் தாசியென்றே எண்ணலாமே.

(வ-ம்.) ஒரு எலுமிச்சம் பழத்தைஎழுத்தாணியால் குத்தி (கவ)வராகனிடை ரசம்விட்டு மெழுக்கினால் துவாரத்தை ய டைத்து வெய்யலில்வைத்தால் சூடு ஏரினமாத்திரத்தில் தரையி ல்நிற்காது செண்டுபோல்எகுறும் அல்லது உருளும் ஆச்சரிய மா யிருக்கும் ஆகிலும் சீமைகாடியில் கொஞ்சம்விட்டாலும் மி கவும்நன்று ஊசிகாந்தம் சேர்க்கவும்,

19-வது, நெருப்பில்லாமல் வஸ்திரங்கொளும்துஞ் ஜாலம்,

ஆமப்பா பயாளவு திமிர்பாஷாணம்
ஆருக்குந்தெரியாமல்கையில்வைத்து
வேமப்பாபஞ்சுமுதல் வஸ்திரங்கள்
வேண்டாததெதுவேனுமெடுத்துக்கொண்டு
போமப்பாபந்துபோல் சுருட்டிக்காத்து
போக்காககாட்டியதை யூதினாக்கால்
நாமப்பாவென்னசொல்வோ மெரியுஞ்சோதி
நடுவானகடவுளென்று நம்புவாரே.

(வ-ம்.) திமிர்பாஷாணம் என்பதை பயாளவு எடுத்துக்கொண்டு கையை எல்லாருக்குங் காட்டிவிட்டுபஞ்சியாவதுவஸ்திரமாவது தேங்காய்நாருவது பந்துபோல்சுருட்டி காத்துவாட்டமாகநின்று மேற்படி பாஷாணத்தை அதில்நுழைத்துஊதினால் குபீலென்றெரியும்,

20-வது, வாயில் நெருப்புகக்குஞ்ஜாலம்,

நம்பவேயின்னமொரு ஜாலங்கேளு
நலமானகொப்பரையை மென்றுதுப்பி
நம்பியேபயரளவு திமிர்பாஷாணம்
நயந்தொருவர் காணாம லுதட்டில்வைத்து
நம்பியேபஞ்சுதனை கவ்விக்கொண்டு
நடுக்கின்ற சபையோர்க்கு நன்றாய்க்காட்டி
நம்பியேகாத்துபுர மூதினாக்கால்
நமதுடைய அக்கினியின் குழியென்பாரே.

(வ-ம்.) ஒரு சிறுபயரளவு திமிர்பாஷாணத்தை உதட்டில்வைத்துக்கொண்டு பஞ்சுதனை பந்துபோல்சுருட்டி வாயில கவ்விக்கொண்டுகாத்துபோகும் வாடையாகநின்று ஊதினால் குபீலென்று பத்தி யெரியும் அதுமகா ஆச்சரியமாயிருக்கும்.

21-வது, பாலெடுக்குஞ்ஜாலம்,

பாலதனைச்சல்லாவில் தோய்த்துத்தோய்த்து
பக்குவமா யுழக்குப்பால் சீலைக்கேத்தி
பாலதனையொருகிணற்றி லூற்றச்சொல்லி
பந்தயங்கள்கட்டி யின்னமெங்காணுவீர்
பாலதனை வாவழைத்துத் தருவேனென்று
பாலகனே வேறிடத்தில் சென்றுநீதான்

பாலளவே தண்ணீரை மொண்டுக்கொண்டு
பாலேத்துஞ்சீலைதனைப் பிழிந்திடுவாயே.

(வ-ம்,) ஒரு நல்விதமானசீலையில் உழக்குப்பாலைத்தோய்த்
துக்காச்சி மறுபடியும் மறுபடியுந்தோய்த்து இப்படிஇரண்டா
ழாக்குபாலை சீலைக்கேத்தி உலர்த்திவைத்துக்கொண்டு சபையோ
ரைப்பார்த்துஇந்தக்கிணற்றில் உழக்குப்பாலை ஊத்திவிடுங்கள்அ
ப்படிஊத்திய பாலை மறுபடி வேறே எந்தக்கிணற்றிலாவதுகுள
த்திலாவதுஏரியிலாவது எந்தயிடங்காட்டினாலும் அந்தயிடத்தி
ல்வரவழைத்துத் தருவேனென்று பந்தயமுங்கட்டிக்கொள்ளலா
ம் எவ்வளவு பால் ஊத்தினார்களோ அவ்வளவுஜலம் ஒருகுவளை
யில்கொண்டுபோய் நாலுபக்கமுந் திரைபோடச்சொல்லி முன்
னால் பாலேயேத்தி உலர்த்திய சீலையைஇந்தஜலத்திலபோட்டு பி
ழிந்துக்கொண்டுவந்து காட்டவும் ஆனால்கறந்தபால்போலநுரை
யிராதுஇவ்விதமாகவே மோரைச்செய்தாலும்செய்யலாம் ஷைசீ
லையைமாத்திரம் கோமணமாக கட்டிக்கொண்டு செய்யவேணும்
வேரேவஸ்திரங்கள்மிச்சமாயிருந்தால்சந்தேகப்படுவார்கள்

22-வது,சோறுவேகாதிருக்க ஜாலம்,

வாகானசோறு வேகாதிருக்க
வரைகின்றவித்தைதனை வளமாய்க்கேளு
சீரானவத்திமரம் (சுட்டு)கழுதை
சிறுநீராலவிழ்த்துமதை யெடுத்துக்கொண்டு
வாகானபெண்களாலே வைக்கும்போது
வாட்டிவைத்த கரியதனையடுப்பில்போட்டால்
வேகாதுமறுபடியுஞ் சுத்திசெய்து
வைத்தாலே வேகுமடா வித்தைதானே,

(வ-ம்) அத்திமரத்தில் சிறுதுண்டுவெட்டிவந்து அதை நன்று
யெரியவைத்து கழுதைமூத்திரத்தால் அவித்து எடுத்துக்கொண்
டுநாயற்றுக்கிழமை மீனலக்கினம்பார்த்துநத்தைச் சூரிசெட்டிக்
கு மஞ்சள் நூலினால் காப்புக்கட்டிவரவும் இன்னமொருநாயிற்று
க்கிழமையில் துலாலக்கினம்பார்த்து நிர்வாணமாயிருந்து செடி
க்குங்காயம்படாமல் உச்சிவேர் அறாமல் பிடிங்கிவந்து மேற்படி
அத்திமரம்சுட்டகரி அடுப்பிலும் இதைபாண்டத்தி லுள்ளேயும்
போட்டால் எதுவானாலும் வேகாது மறுபடியும்அடுப்பைசாணி
யால்மெழுகி சுத்திசெய்தாலொழிய வேகாது,

### 23-வது, பழத்தில ரத்தங்காட்டுஞ்ஜாலம்.

விந்தையாமெலுமிச்சம்பழத்தையப்பா
விதமாக சபையோர்க்கு நன்றாய்க்காட்டி
சந்தனமும்செம்பரித்திப் பூவின்சாற்றை
சரசமாய்கத்தியின்மேல் பூசிப்பூசி
மந்தமாய் தடவியதை யுலர்த்திக்கொண்டு
மைந்தனேபழமதனை கையிலேந்தி
அந்திரமாங்காளிக்கி பலியிதென்று
அறுக்கையிலே ரத்தம்போல் சொரியும்பாரே.

(வ-ம்,) ஒருகத்தியில் செம்பருத்திம்பூவின் சாற்றைப்பிழிந்து தடவி யிரண்டு மூன்றுவிசை பூசி யுலர்த்தி வைத்துக்கொண்டு சபையில்வந்து எலுமிச்சம்பழத்தையேந்தி அந்தகத்தியினால் அறுத்தால்ஆடுகோழியறுத்தால் எப்படியோ அப்படி இரத்தம் சொரியும் சிலர்பயப்படுவார்கள்.

### 24-வது, கோழிமுட்டைபாக்குஞ்ஜாலம்.

பாரப்பாகோழியது முட்டைவாங்கி
பக்குவமா யம்பிலியில் பாதியூற்றி
வாரப்பாசீமையுடக் காடிபாதி
வளமானஊசியிட காந்தங்கொஞ்சம்
சேரப்பா இரண்டையுமேயுள்ளேதாக்கி
சிறுதுளையைகாகிதத்திலொட்டிப்போடு
பாரப்பா வெய்யலிலே வைத்துப்பாரு
பறக்குமடாகூடேறக் கீழ்நில்லாதே

(வ-ம்) கோழிமுட்டையைவாங்கி அதில்சிறுதுவாரஞ்செய்து பாதியம்பிலியை யூத்திவிட்டு அதற்குபதில் சீமைக்காடியை யூற்றி ஊசிகாந்தங் கொஞ்சஞ்சேர்த்து அதின்துளையை காகிதத்தில் ஒட்டிவெய்றலில்வைத்தால் கூடேறினபிறகுகீழேநிற்காது.

### 25-வது, கிணற்றிலிறங்கி சோறுக்குஞ்ஜாலம்,

அரிசியொருகால்படிதான் மூட்டைகட்டி
அப்பனேசுண்ணாம்புகால்வாய்க்கீழே
வரிசையாய்வைத்திரண்டுநாழிசென்று
வாங்கிப்பின் னெடுத்துவொருகுடுவைதன்னில்
அரையிடையா யரிசியிட்டு கிணற்றில்மூழ்கி
அவ்வளவேஜெலம்வார்த்து மேலேதூக்கி

பரிவாகசபையோர்க்கு காட்டப்பாநீ
பதருவார் கதருவார் பணிகுவாரே

(வ-ம்) கால்படி அரிசியை மூன்றுபுறை துணிபோட்டு அதில் மூட்டைகட்டி சுண்ணாம்புகாலவாய் கீழேவைத்து கால்வாய் வெந்தபிறகுஎடுத்துவைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையிலொருகுடுவைவைத்து அதில் பாதிகுடுவை அரிசிபோட்டு இதைக்கிணற்றில் இறங்கிச்சமைத்துவருவேனென்று கிணற்றிலிறங்கி அரிசிக்குத்தகுந்த ஜெலம்விட்டுகுடுவையை தண்ணிக்கு மேலேதூக்கி பிடித்திருக்கவேண்டும் குடிவயைமூழ்க்கினால அரிசியெல்லாம் போய்விடும் சற்றுநேரம்யிருந்துவரும்போது தலைமுதலானதுகளை நனைத்துக்கொண்டுவந்தால் சபையோர்கள் உன்னை ஜலத்துக்குள்ளேயிறங்கி சமைத்தானென்று ஆச்சரியப்படுவார்கள்

## 26-வது, துணியில் சோளம்பொரிக்கும்வித்தை,

பணியவேசோளமதை மூட்டைகட்டி
பக்குவமாய்முன்போலவைத்தெடுத்து
துணியதனைசவுக்கமாய் பிடிக்கச்சொல்லு
துளியாகஜெலந்தெளித்து வறுத்தையாகில்
மணிகளே முத்துப்போல் பொரியும்பாரு
மந்திரக்காரனென்று மயங்குவார்கள்
அணியணியாய்மீன்பிடிக்கும் ஜாலவித்தை
அரைகின்றே னறிவாகக் கேட்டுக்கொள்ளே.

(வ-ம்) சோளத்தை முன்போலவே மூட்டைகட்டி சுண்ணாம்புகாலவாயில்வைத்தெடுத்துக்கொண்டு துணியை சவுக்கமாய் பிடிக்கச்சொல்லி நடுவில்சோளத்தைபோடடுகொஞ்சம்ஜலத்தைதெளித்தால் முத்துப்போல்பொரியும் சபையோர்கண்டு ஆச்சரியப்படுவார்.

## 27-வது, மீன்பிடிக்கும்வித்தை

கேட்டுக்கொள்திருகுசள்ளித்தண்டையப்பா
திடமாகமுழுமுழமாய்தரித்துக்கொண்டு
வாட்டமாந்துறவுகளில் ஏரிதன்னில்
வளமானகுளங்களிலே குட்டைதன்னில்
நீட்டமாய்மாராளவு துலவுக்கொன்று
நெருங்கவேபோட்டங்கே நின்றுபாரு
ஆட்டத்தை யென்சொல்வேன் மீன்களெல்லாம்
அடியோடுமேல்தோன்றி மிதந்துபோமே,

(வ-ம்) திருகுகள்ளித்தண்டை துண்டுதுண்டாக வெட்டிகுள ங்கிணறு முதலானயிடங்களிலநெருங்கப்போட்டுசற்று நோமசி ன்றாலும் பேன்கொட்டையைவறுத்து உரித்தயிருசரியாய்வைத் தரைத்து ஷையிடங்களில தூவினாலும வேண்டியவரையில்வாரி க்கொள்ளலாம்,

28- வது கையில் பந்தமேந்துஞ்ஜாலம்

ஆமடா கத்தாழை மடலின் சோத்தை
அப்பனே பில்லை பில்லை யாகவெட்டி
நாமடா கையிலே பதியவைத்து
நலமான சல்லாவை மேமேலேமூடி
வேமடாபந்தத்தைகொளுத்திக்கொண்டு
வையடா கையிலே யேற்றினுக்கால்
போமடா ஜெலம்போலே குளிர்ந்திருக்கும்
பொய்யல்ல சத்தியமாய் செய்துபாரே.

(வ-ம்) கத்தாழைமடல் சோத்தை பில்லைபில்லையாக அறுத்து உள்ளங்கையில்வைத்து மேலே சல்லாத்துணியைமூடி எண்ணே ப் பந்தம்கொளுத்திவைத்து ஏந்தினால் பந்தம்பிரகாசமாயெரியும கைசுடாது சல்லாத்துணியும் வேகாது இது திஷ்டாந்திரம்.

26.வது நெருப்பில்லாமல் கற்பூரங்கொளுத்தும்வித்தை,

சிறுபயரினளவு திமிர்பாஷாணத்தை
சூடமென்றகற்பூரக் கட்டிமீதில்
அறிவாகபதியவைத்து கையிலேந்தி
அப்பனேசபையோர்க்கு நன்றாய்க்காட்டி
குறுவுக்குதூபமென்று ஊதப்பாரீ
கொழுந்தோடியெரியுமது குருவேசாட்சி
சிறுமணவூர்முனிசாமி செய்தஜாலம்
சினேகிதரே உங்களுக்கு சொல்லச்சொன்னான்

(வ ம்) சிருபயரளவு திமிர்பாஷாணத்தை கற்பூரக்கட்டிமீதில் வைத்து கையிலேந்தி சபையில் நன்றாய்க்காட்டி குருவுக்கு தூ பமென்றுசொல்லி ஊதினால் குபீலென்று எரியும் சபையோ ரெ ல்லாம் ஆச்சரியப்படுவார்கள்,

இரண்டாம்பாகம்-முற்றிற்று

இனி மூன்றாம்பாகம்